**சேருவில பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்ககை முறையே 2019 மே 27, 2019 மே 31 ஆந் திகதிகளில் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சேருவில பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக் கூற்றுக்களை ஒழுங்குபடுத்தலுக்காக பின்பற்றவேண்டிய கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை தெரிவித்தல் இடம் பெற்றிருக்கவில்லை. |

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31ஆம் திகதியில் காணப்பட்ட நிர்மாணித்தல் செயற்திட்டமொன்றிற்கு உரிய ரூபா 284,533 வங்கிக் கணக்கின் மீதி இறுதி கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்க வில்லை. | சேமிப்பாக காணப்படுகின்ற பணத்தை சபையின் நிதியத்திற்கு கொண்டுவருவது அல்லது பயன்தரு நிர்மாண நடவடிக்கை யொன்றிற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31ஆம் திகதியில் காணப்பட்ட ரூபா 284,533 வங்கிக் கணக்கின் மீதியாக காணப்பட்ட பணம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை என்பதுடன் கணக்கை மூடிவிட்டு அதில் காணப்படுகின்ற மீதியை எங்களுடைய சபையின் |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்கிற்கு பெற்றுக்கொள்வதாக குறிப்பிடுகின்றேன். |
| (ஆ) | 2018 ஆம் வருடத்திற்குள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,602,577 பெறுமதியான சொத்துக்கள் திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | வருடத்திற்குள் கொள்வனவு செய்யப்படுகின்ற நிலையான சொத்துக்களுக்காக மூலதனத்தில் வருமானத்திற்கு பங்களிப்பு செய்யும் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டும். | 2019 வருடத்திற்கான இறுதி கணக்குகளை தயாரிக்கும்போது இதை சரி செய்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிகள் | | | |
| i. | 59 ஆவது விதி | ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலேயே சபையின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இடம் பெறும் வியாபார மற்றும் தொழில் முயற்சிகள் சம்பந்தமாக மதிப்பீடொன்றை பிரதேச சபையினால் மேற்கொண்டிருக்க வில்லை. | ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலேயே சபையின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இடம் பெறும் வியாபார மற்றும் தொழில் முயற்சிகள் சம்பந்தமாக மதிப்பீடொன்றை பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும். | சபையின் வருமான உத்தியோகத்தர் பதவிகள் இரண்டு காணப்படுவதுடன் அதில் ஒரு பதவிக்காக வெற்றிடமொன்று காணப்படுகின்றது. சுபையின் வருமானத்தை ஒன்னு திரட்டும் மற்றும் பதவிக்கு சமபந்தமான அனைத்து வேலைகளையும் ஒரு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப் படுவதனால் இந்த பிரச்சினை மேலோங்கி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இருந்தது. எப்படியிருந்தாலும் இந்த வருடத்திற்குள் அந்த மதிப்பீட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியுமென்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| ii. | 217 ஆவது விதி | நிலையான சொத்து பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக் க வில்லை | நிலையான சொத்து பதிவேடு சரியாக நாளது வரையாக்கப்பட வேண்டும் | நிலையான சொத்து பதிவேடொன்று பராமரிக்கப்பட்டு வருவதுடன் அந்த பதிவேட்டில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்திசெய்து மிகவும் சரியான முறையில் நாளது வரையாகப் பேணப்படுவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | 2006 மார்ச் 24ஆம் திகதியில் 128 ம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிக்கை | 2018ஆம் வருடத்திற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்க வில்லை | வருடத்திற்கான பெறுகைகள் திட்டமொன்று ஒழுங்கு செய்ய வேண்டும் | எதிர்காலத்தில் பெறுகைகள் திட்டமொன்றை தயாரிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை மெற்கொள்வதாக தாழ்மையுடன் குறிப்பிடுகின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்ககூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 5,913,108 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவீனத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 14,562,806 தொகை ஆகும்.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பேணப்பட்டு வருகின்ற நடைமுறைக் கணக்கில் 2018 ஆம் வருடத்தில் ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூபா 13 மில்லியனுக்குமிடையிலான மீதியொன்று காணப்பட்டதுடன் இந்த தொகையின் மேலதிக பணத்தை நிலையான வைப்பு ஒன்றிற்கு முதலீட்டு வருமானம் ஈட்டிக் கொள்வதற்கு சபையின் அவதானம் ஈர்க்கப்பட்டிருக்கவில்லை | சபைக்கு வருமானமொன்று கிடைக்கும் பாதுகாப்பான முதலீட்டு வழியொன்றில் முதலீட்டு வருமானத்தை வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த விடயத்தை பிரதேச சபைக்கு முன்வைத்து சபையினால் பெற்றுத்தரப்படும் தீர்மானத்தின் படி நடவடிக்கை மேற்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வதாக தாழ்மையுடன் குறிப்பிடுகின்றேன். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,835 | 3,958 | 3,138 | 165 | 3,815 | 4,166 | 3,842 | 324 |
| வாடகை | 565 | 1,605 | 816 | - | 415 | 433 | 433 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 7,186 | 16,069 | 12,538 | 2,269 | 7,183 | 11,967 | 5,788 | 4,910 |

### 2.3.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபைக்கு சொந்தமான கடைகள் மற்றும் விடுதிகளுக்காக 2011 வருடத்திலிருந்து 2017 வருடம் வரையான | சபைக்கு சொந்தமான கடைகள் மற்றும் விதிகள் என்பவற்றிலிருந்து | இது விடயமாக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு வழக்கறிஞரொருவருக்கு பணம் செலுத்துவதற்கு சபை |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் ரூபா 981,314 பணம் 2019 மார்ச் 13 ஆம் திகதியாகியும் அறவிடப்பட்டிருக்க வில்லை | கிடைக்க வேண்டி காணப்படுகின்ற வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அனுமதியை பெற்றுக் கொண்டதுடன் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கையின் மூலம் உரிய நிலுவை பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | மோட்டார் க்ரேடரை ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 3500 வீதம் அறவிட்டு கூலிக்கு வழங்கியதன் மூலம் சபை 2018ஆம் வருடத்தில் ரூபா 832,325 வருமான தொகையாக பெற்றிருந்தது. எப்படியிருந்தாலும் அதை கூலிக்கு வழங்கும் போது மாவட்ட செயலாளர் காரியாலத்தினால் அனுப்பப்பட்ட உரிய விலை பட்டியலுக்கு பொருத்தமான கூலிக்கு வழங்காததன் காரணமாக ரூபா 166,460 வுக்கு அண்மித்த வருமான தொகையொள்றை சபை இழக்க நேரிட்டது. | மாவட்ட செயலாளர் காரியாலயத்தினால் குறிப்பிடப்படுகின்ற விலை பட்டியலுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சேருநுவர பிரதேச சபை கட்டுபாட்டிலுள்ள பிரதேச மக்களுக்கு உதவிதொகையாக இந்த தொகை JCB மற்றும் மோட்டார் க்ரேடர் இயந்திரங்களுக்கு அறவிடப்படும் போது பிரயாணத்திற்காக செலவாகும் தொகையும் சேர்க்கப்பட்டு அறவிடப்பட்டது. இருந்தாலும் எதிர்காலத்தில் மாவட்ட செயலாளர் காரியாலயத்தினால் குறிப்பிடப்படுகின்ற விலை பட்டியலுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (இ) | JCB இயந்திரம் ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 3000 வீதம் சபையினால் கூலிக்கு வழங்கி 2018 ஆம் வருடத்திலே ரூபா 392,250 வருமானமாக பெற்றிருந்தது. இருந்தாலும் இந்த இயந்திரத்திற்காகவும் மாவட்ட செயலாளர் காரியாலயத்தினால் அனுப்பப்பட்ட உரிய விலை பட்டியலுக்கு அமைய கூலிக்கு வழங்காததன் காரணமாக ரூபா 65,375வுக்கு அணமித்த | மாவட்ட செயலாளர் காரியாலயத்தினால் குறிப்பிடப்படுகின்ற விலை பட்டியலுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படே வண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்துரை தெரிவித்தல் இடம் பெறவில்லை |

வருமான தொகையொன்றை சபை இழக்க நேரிட்டது.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம்

#### (அ) நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கிழக்கு மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31ஆம் திகதி யாகும் போது சபைக்கு அறவிட்டுக் கொள்வதற்கு காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,909,712 ஆக இருந்த போதும் அதை இதுவரைக்கும் அறவிட்டுக் கொள்வதற்கு சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இதுவரை எங்களால் உரிய பணத்தொகையை உரிய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன் எதிர்ப்பார்க்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 28ஐ நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட்ட வேண்டியிருந்தும் 2018 திசெம்பர் 31 திகதியாகும் போது உப வழிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உபவிதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

## (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் வருடத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கை ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்து அதன்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பிரதேச சபையின் தலைவரின் வேண்டு கோளுக்கிணங்க 2013 ஆம் வருடத்திலே திண்மகடகழிவு முகாமைத்துவத்தினால் 0.4 ஹெக்ஷேயர் நிலம் சேருவில் பிட்டுவ பிரதேசத்தில் வழங்கப்பட்டிருந்த போதும், சபையினால் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் அந்த இடத்தில் கொட்டப்படாமல் முறையற்ற விதத்தில் வனசீவராசிகள் திணைக்களத்திற்கு சொந்தமான இடத்தில் கொட்டப்பட்டிருந்தது. | முறையாக கழிவுகளை கொட்டுவதற்கு தேவையான படிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். | வன பாதுகாப்பு திணைக்களத்தினால் 0.4 ஹெக்றேயர் அளவுள்ள நிலப்பகுதி கொம்போஸ்ட் உற்பத்தி நிலையமொன்றை நிர்மானிப்பதற்காக வழங்குவதற்கு 2014 ஆம் வருடத்திலே அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் அந்த நிலப்பகுதியை எழுத்து மூலமாக இந்த சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொணடிருக்கவில்லை. இது தொடர்பாக விசாரித்த போது அந்த காணியில் கொம்போஸ்ட் உற்பத்தி நிலையமொன்றை நிர்மானிப்பதற்கு முன்னர் சுற்றாடல் அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்கு தேவைப்பாடு உள்ளதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஒவ்வொரு வயதிலும் உயிர்வாழ்கின்ற மனிதர்களுக்கும் நல்ல சுகாதார நிலையொன்றை உருவாக்கிக் கொடுத்தல் நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கமாகும். அதற்காக குறைந்த நிறையுடன் குழந்தைகள் பிறக்கின்ற அளவை குறைத்தல் அதை உறுதி செய்வதை பாதிக்கின்ற ஒரு விடயமாக இருந்தாலும் சேருவில பிரதேச சபை அதிகார எல்லையிலே குறைந்த நிறைவுடன் பிறக்கின்ற அளவு தொடர்பாக அவதானிக்கும்போர்து 2015ஆம் வருடம் ஆகும் போது படிப்படியாக அதிகரித்துள்ளதுடன் அது பிள்ளைகளின் முறையான வளர்ச்சிக்கு இடையூறாக அமைவதுடன் சபையினால் அதை குறைத்துக் கொள்வதற்காக இதுவரை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | நிலைவேறான அபிவிருத்தியின் நிகழ்ச்சி நிரலை அடைந்து கொள்வதற்கு சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | சேருவில பிரதேசத்திலே குறைந்த நிறையுடைய குழந்தைகள் பிறத்தல் சபையின் கவனத்தீற்கு கொண்டு வந்து இந்த நிலையை குறைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து வெற்றிடமாக காணப்படுகின்ற ஆயுர்வேத வைத்தியர் பதவிக்காக தகுதியான உத்தியோகத்தரை நியமிப்பதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. | ஆயுர்வேத வைத்தியர் பதவி வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | நூல்நிலைய அதிபதி மின் தொழில்நுட்ப அதிகாரி மற்றும் வருமான பரிசோதகர் ஆகிய | காணப்படுகின்ற வெற்றிடங்கள் நிரப்பப்பட | எதிர்காலத்தில் இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | பதவிகளுக்கு 05 வருடத்திலிருந்து காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொணடிருக்கவில்லை. | வேண்டும். | நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை கட்டிடத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்திய நிலையத்தின் புள்ளிவிபர பதிவேட்டின் படி வருடத்திற்கு 1200 அளவிலான நோயாளிகள் பரிகாரம் பெற்றிருந்தாலும் இங்கு சேவையற்றில் ஆயுர்வேத வைத்திய அதிகாரி வேறு இடத்திற்கு மாற்றம் பெற்று சென்றதன் பின்னர் வைத்தியர் ஒருவரை நியமிப்பதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. இதனால் வைத்திய மத்திய நிலையம் 2014ஆம் ஆண்டு ஜீன் மாதத்திலிருந்து மூடப்பட்டதனால் சபையின் அதிகார எல்லையில் உள்ள மக்களுக்கு சேவையை வழங்கி அவர்களின் சுகாதார மட்டத்தை மேம்படுத்தும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாதுள்ளது. மேலும் ஆயுர்வேத வைத்திய மத்திய நிலையம் மூடப்பட்டதன் காரணமாக அங்குள்ள ரூபா 45,078 பெறுமதியான 22 மருத்துவகைகள் பாவனைக்கு உட்படுத்த முடியாத நிலைக்கு மாறியுள்ளது. | காணப்படுகின்ற ஆயுர்வேத வைத்திய பதவியின் வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும் | எதிர்காலத்தில் ஆயுர்வேத வைத்தியரொருவரை பெற்று ஆயுர்வேத வைத்திய மத்திய நிலையத்தை முறையாக நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 06 உயர்தரமான கடைகளட 2018ஆம் வருடத்திற்காக ஒப்பந்தத்தில் கையொப்பமிடாமல் முன்னைய வருடத்தில் வாடகைக்கு வழங்கிய நபருக்கே 2018 ஆம் வருடத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. எப்படியாயினும் அந்த கடைகளில் 02 கடைகளிலிருந்து ரூபா 85,580 | வாடகைக்கு வழங்கும் போது அதற்கு முன்னர் ஒயங்தம் கையொப்ப மிடப்பட வேண்டு மென்பதுடன் காணப்படுகின்ற | இந்த நிலுவைப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதுடன் தவணை முறையாக நிலுவை பணத்தை |

| | | | |
|---|---|---|---|
| | வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் ஒப்பந்தம் கையொப்பமிடப்படாததன் காரணமாக நிலுவை பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிலுவைப் பணத்தையும் அறவிட வேண்டும் | பெற்றுக் கொள்வதற்கு ஆரம்பித்துள்ளதாகவும் தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (இ) | சபையினால் 2017 மார்ச் 07ஆம் திகதி ரூபா 49,500 பணத்திற்கு விரல் அடையாள இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 03 மாத கால அளவு அந்த இயந்திரத்தினால் பணம் கிடைத்த பின்னர் அது இயங்காமல் பழுதடைந்து காணப்பட்டதுடன் இதுவரை அந்த இயந்திரத்தை திருத்தங்கள் மேற்கொண்டு பாவனைக்கு உட்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | விரல் அடையாள இயந்திரத்தை திருத்தங்கள் மேற்கொண்டு பாவனைக்கு உட்படுத்து வதோடு அதன் மாதாந்த அச்சுப்பிரதியை பெற்றுக்கொள்வ தற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | விரல் அடையான இயந்திரம் திருத்தப்பட்டு எதிர்காலத்தில் பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 உரிமை மாற்றப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளர் காரியாலயம் அகியவற்றுக்கு சொந்தமான 25 காணிகளில் சபையினால் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது ரூபா 68,008,546 வுக்கு விளையாட்டு மைதானம், பொது கிணறு வரவேற்பு மண்டபம் மற்றும் பொது வியாபார நிலையங்கள் ஆகியன நிர்மாணிக்கப்பட்டிருந்தாலும் இந்த இடங்களுக்கான சட்டபூர்வமான உரிமை சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | காணிகளுக்கான சட்டபூர்வமான உரிமை சபைக்கு மாற்றப்பட வேண்டும். | பிரதேச காணிகள் சபைக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் இருந்தாலும் இதுவரை உரிமைப் பத்திரம் வழங்கப்படவில்லை என்பதுடன் உரிமைப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு முடியாதுள்ளது. எப்படியாயினும் உரிய காணிகளுக்காக உரிமைப் பத்திரம் பிரதேச செயலாளர் சேருவிட இடம் கேட்கப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலாளரினால் தேவை என்று குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் இப்போதைக்கும் |

| | | |
|---|---|---|
| | | பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

**3.4.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படுகின்ற 05 வாகனங்கள் ஒரு வருடத்திற்கு அதிககாலத்திலிருந்து விளைவற்ற நிலையில் காணப்பட்டதுடன் அவற்றை திருத்துவதற்கு அல்லது பொருத்தமான வேறு முறையொன்றை மேற்கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | திருத்துவதற்கு அல்லது பொருத்தமான வேறு முறையொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். | பாதீட்டில் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் அவுகளின் படி எதிர்காலத்தில் இந்த வாகனங்களை திருத்துவதற்கு நடவடிக்கை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**3.5 பொருளியலற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர அலங்காரம் மற்றும் சபைக்கு வருமானமொன்றை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பிரதேச சபையினால் அறிவித்தல் பிரசாரத்திற்காக LED அறிவித்தல் பலகையொன்றை பொருத்துவதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 938,000 செலவிடப்பட்டுள்ளது. இந்த அறிவித்தல் பலகையை செயற்படுத்தும் போது உட்படுத்தப்பட வேண்டிய ஒளியின் அளவு எமற்றும் பிரசாரம் செய்யக் கூடிய அறிவித்தலின் அளவு தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் நடவடிக்கை மேற்கொண்டதால் 2014 மார்ச் 17 ஆம் திகதியிலிருந்து செயலிழந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக இதுவரையும் செலவு செய்யப்பட்ட பணம் விளைவற்ற செலவவாக | கூடிய பயனை பெற்றுக்கொள்ளும் வகையில் பொருத்தமான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். | இந்த LED திரை 2014ஆம் வருடம் கொள்வனவு செய்யப்பட்டு நிருவப்பட்டதுடன் அதற்குப்பிறகு பல சந்தர்ப்பங்களில் மீண்டும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பிரசார அறிவித்தல்கள் காட்சிபடுத்தப்பட்டு வருமானம் ஈட்டிக்கொள்ளுதலின் நோக்கமாக நிருவப்பட்டதன் மூலமாக எதிர்ப்பார்க்கப்பட்ட வகையில் வருமானமொன்று பெறமுடியாமல் போனது மற்றும் பராமரிப்புச் |

| | | |
|---|---|---|
| காணப்பட்டது. | | செலவு அதிகமாக காணப்படல் போன்றன காரணமாக நீண்ட காலமாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை.<br><br>எப்படியிருந்தாலும் தற்போது LED திரையை சரிசெய்ய முடியுமாக இருந்தால் ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும். அதனால் சபையின் அனுமதியை பெற்றுக்கொண்டு இந்த LED திரையை திருத்தங்கள் மேற்கொண்டு பாவனைக்கு உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேறகொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

**3.6.1 லிங்கபுரம் வாசிகசாலை நிர்மாணித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஒப்பந்த வேலைகள் நிறைவு செய்யப்பட்டு 2016 நவம்பர் 14 ஆம் திகதியாகும் போது சபைக்கு ஒப்படைக்க வேணடியிருந்தாலும், வேலை நிறைவு செய்வதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது 2017 மாாச் 15ஆம் தினத்திலேயாகும். அதன்படி தாமதமான 04 மாதங்களுக்காக தாமதக் கட்டண பணமான ரூபா. 336,819 தொகையை குறைத்திருக்கவில்லை. | தாமதக் கட்டணம் குறைக்கப்பட வேண்டும். | ஒப்பந்தக்காரரினால் காலத்தை நீடித்துத் தருமாறு 2016/11/12 திகதியில் வேண்டுகோள் விடப்பட்டது. அது தொடர்பாக பிரதேச உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளரிடம் காலத்தை நீடித்துத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி காலத்தை நீடித்துத் தருவதற்கான எழுத்து மூல அனுமதியொன்று கிடைக்குமென்று நம்புவதோடு எதிர்காலத்தில் அது தொடர்பாக தேடிப்பார்த்து அறிக்கைப்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுப்பேன்.ரூபா 281,000 பிடித்து வைத்திருக்கும் பணத்தொகை இந்தக் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தவேண்டியிருப்பதுடன், இந்த கால நீடிப்புக்கான அனுமதி உறுதிப்படுத்தப்படும் வரையிலும் உரிய பணத்தொகை விடுவிக்கப்படமாட்டாது என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | நூல்நிலையத்திற்கு White board ஐ பொருத்துவதற்கு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 35,000 செலுத்தப்பட்டிருந்தாலும் அது பொருத்தப்படாததன் காரணமாக அந்தப்பணம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். | P14 இன் கீழ் வேலைத்தளத்தின் திட்ட பதிவுகளை மேற்கொள்ளல் மற்றும் ஒவ்வொருநாளும் நிர்மானப்பணி விபரங்களை பதிவுக்குட்டுத்தப் தொழிளாளர்களின் வேலைத்தளத்தின் வேலைக்குட்படுத்துவதை பதிவுக்குட்படுத்தல் என்பவற்றுக்காக Sign Board ஒன்று ஒப்பந்தக்காரரின் தற்காலிக உதவி காரியாலயத்தின் பேணப்பட்டு வந்ததாக அறிவிக்கின்றேன். |